शरीरारोग्यमैश्वर्यमरिपक्षक्षयः सुखम् ।

देवि त्वद्दृष्टानां पुरुषाणां न दुर्लभम् ॥

ஶரீர ஆரோக்யம் ஐஶ்வர்யமரிபக்ஷ க்ஷய: ஸுகம்|
தேவி த்வத் அத்ருஷ்டானாம் புருஷாணாம் ந துர்லபம்|| (1–9–125)

எம்பெருமாட்டியே ஸ்ரீ உனது கடைக்கண் பார்வைக்கு பாத்திரமான புருஷர்களுக்கு உடல் ஆரோக்கியமும், ஐஶ்வர்யமும், அனைத்து அதிகாரங்களும், எதிரிகளிடத்தில் வெற்றியும், எல்லா சுகங்களும் கிடைப்பதென்பது அரிது அல்ல.

त्वं माता सर्वलोकानां देवदेवो हरिः पिता ।

त्वयैतद्विष्णुना चाम्ब जगद्व्याप्तं चराचरम् ॥

த்வம் மாதா ஸர்வலோகானாம் தேவதேவோ ஹரி: பிதா|
த்வயை தத் விஷ்ணுனா சாம்ப ஜகத் வ்யாப்தம் சராசரம்|| (1–9–126)

ஹே எம்பிராட்டியே ! எல்லா உலகங்களுக்கும் நீயே தாய். ஸர்வருக்கும் ஈஶ்வரனான ஸ்ரீமந் நாராயணனே தந்தை. ஹே அன்னையே ! பிராட்டியும் பெருமாளுமான நீங்கள் இருவரும் சேர்ந்து மட்டுமே சராசர ஸ்வரூபமான இந்த பிரபஞ்சம் முழுவதும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கின்றீர்கள்.

मा नः कोशं तथा गोष्ठं मा गृहं परिच्छदम् ।

मा शरीरं कलत्रं च त्यजेथाः सर्वपावनि ॥

மா ந: கோஶம் ததா கோஷ்டம் மா க்ருஹம் பரிச்சதம்|
மா ஶரீரம் களத்ரம் ச த்யஜேதா: ஸர்வ பாவனி|| (1–9–127)

அனைத்தையும் தூய்மையாக்கவல்ல தாயே! அடியோக்களுடைய பணப்பெட்டி, பசுத்தொழுவம், க்ருஹம், போகத்தைக் கொடுக்கின்ற பொருட்கள், உடல் மற்றும் மனைவி முதலானவற்றை ஒருநாளும் அடியோங்கள் பிரியாமல் இருப்பதற்கு அருள் செய்ய வேண்டும்.

मा पुत्रान्मा सुहृद्वर्गं मा पशून्मा विभूषणम् ।

त्यजेथा मम देवस्य विष्णोर्वक्षः स्थलालये ॥

மா புத்ரான்மா ஸுஹ்ருத்வர்கம் மா பஶூன்மா விபூஷணம்|
த்யஜேதா மம தேவஸ்ய விஷ்ணோர் வக்ஷஸ்தல ஆலயே|| (1–9–128)

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் திருமார்பில் அகலகில்லேன் இறையுமென்று வீற்றிருக்கும் அன்னையே! அடியோங்களின் புத்திர, மித்திர வர்க்கங்களையும், பசு, ஆடை ஆபரணங்கள் முதலானவற்றை விட்டகலாதவாறு அருள் பாலிக்க வேண்டும்.

सत्त्वेन सत्यशौचाभ्यां तथा शीलादिभिर्गुणैः ।
त्यज्यन्ते ते नराः सद्यः सन्त्यक्ता ये त्वयामले ॥

ஸத்வேன ஸத்ய ஶௌசாப்யாம் ததா ஶீலாதிபிர் குணை:||
த்யஜ்யந்தே தே நரா: ஸத்ய: ஸந்த்யத்தா யே த்வயாமலே|| (1–9–129)

ஹே தூய்மையான பிராட்டியே! மனிதர்களை தாங்கள் கைவிட்டுவிட்டால், அவர்களின் ஸத்யம், ஒழுக்கம், சீலம் முதலான குணங்களும், தனதான்யங்களும் அவர்களின் சீக்கிரம் இல்லாமல் போய்விடும்.

त्वया विलोकिताः सद्यः शीलाद्यैरखिलैर्गुणैः ।
कुलैश्वर्यैश्च युज्यन्ते पुरुषा निर्गुणा अपि ॥

த்வயா விலோகிதா: ஸத்ய: ஶீலாத்யௌர் அகிலைர் குணை:|
குலைஶ்வர்யைஶ்ச யுஜ்யந்தே புருஷா நிர்குணா அபி|| (1–9–130)

தங்களின் கிருபையென்னும் பார்வை உண்டானால், ஒருவன் குண ஹீனனாக இருந்தபோதிலும் அவன் சீக்கிரமாகவே எல்லா சௌபாக்கியங்களையும் அடையப் பெற்று பிரபுவாக வாழ்வான்.

स श्लाघ्यः स गुणी धन्यः स कुलीनः स बुद्धिमान् ।
सशूरः स च विक्रान्तो यस्त्वया देवि वीक्षितः ॥

ஸ ஸ்லாக்ய: ஸ குணீ தந்ய: ஸ குலீன: ஸ புத்திமான்|
ஸ ஶூர: ஸ ச விக்ராந்தோ யஸ்த்வயா தேவி வீக்ஷித:|| (1–9–131)

ஹே தேவி! எவன் உனது கிருபைக்குப் பாத்திரமானவனோ, அவனே குணவான், புண்ணியவான், புத்திமான், வீரன், சூரன் மற்றும் பராக்கிரமசாலி ஆவான்.

सद्यौ वैगुण्यमायान्ति शीलाद्याः सकला गुणाः ।
पराङ्मुखी जगद्धात्री यस्य त्वं विष्णुवल्लभे ॥

ஸத்யௌ வைகுண்யம் ஆயாந்தி ஶீலாத்யா: ஸகலா குணா:|
பராங்முகீ ஜகத்தாத்ரீ யஸ்ய த்வம் விஷ்ணுவல்லபே|| (1–9–132)

ஹே மஹாவிஷ்ணுவிற்கு என்றும் பிரியமானவளேஸ்ரீ ஹே ஜகத்ஜனனிஸ்ரீ தாங்கள் ஒருவனை வெறுப்பீர்களானால், அவனுடைய வாய்மை, சமதர்மம் முதலான நற்குணங்கள் எல்லாம் நொடியில் துர்க்குணங்களாகிவிடும்.

न ते वर्णयितुं शक्ता गुणाञ्जिह्वापि वेधसः ।
प्रसीद देवि पद्माक्षि मास्मांस्त्याक्षीः कदाचन ॥

*ந தே வர்ணயிதும் ஶக்தா குணாஞ்ஜிஹ்வாபி வேதஸ:|*
*ப்ரஸீத தேவி பத்மாக்ஷி மாஸமாம்ஸ்த்யாக்ஷீ கதாசன||* (1-9-133)

*உனது திருக்கல்யாண குணங்களை சதுர்முக பிரமதேவனும் துதிக்க இயலாதபோது இந்திரனான அடியேனால் எவ்விதம் துதிக்க இயலும்? ஆயினும் தாயேஸ்ரீ அருள் கூர்ந்து தேவர்களான அடியோங்களை கைவிட்டுவிடாமல் காத்தருள வேண்டும்.*

என்று இந்திரன் பிராட்டியை ஸ்தோத்திரம் செய்தான்.

அப்பொழுது, எங்கும் வியாபித்திருக்கும் ஸ்ரீ மஹாலக்ஷ்மி பிராட்டி திருவுள்ளம் மிக மகிழ்ந்தவளாய் இந்திரன் முன்பு ப்ரத்யக்ஷமாகி, ***"ஹே தேவேந்திரா! நீ செய்த ஸ்தோத்திரத்தினால் நான் மகிழ்ச்சியடைந்து உனக்கு வரமளிக்க வந்துள்ளேன். வேண்டிய வரங்களைக் கேட்பாயாக! "*** என்று அருளிச் செய்தாள்.

தேவேந்திரனும் அக்கணமே பெரிய பிராட்டியாரை தண்டனிட்டு வணங்கி, **"தாயே! தாங்கள் இந்த மூவுலங்களிலும் எப்பொழுதும் எழுந்தருளி இருக்க வேண்டும். மேலும், எவன் ஒருவன் அடியேனால் துதிக்கப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தினால் தங்களை துதிக்கின்றானோ, அவனைத் தாங்கள் ஒருபொழுதும் கைவிடாமல் காத்தருள வேண்டும்"** என்ற இரண்டு வரங்களை நல்கும்படி வேண்டினான்.

இந்திரன் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்ட ஸ்ரீ மஹா சக்ஷ்மி பிராட்டியார், ***"ஹே அமரர் தலைவா ! நீ விரும்பியபடியே உனது உலகத்தை விட்டு நான் நீங்குவதல்லை. எவன் ஒருவன் தினந்தோறும் காலை மற்றும் மாலை வேளைகளில் உன்னுடைய இந்த ஸ்தோத்திரத்தினால் என்னை துதிக்கின்றானோ, அவனுக்கு ஸமஸ்த ஐஶ்வர்யங்களையும் நல்கி அவனுடைய க்ருஹத்தில் நித்திய வாஸம் செய்வேன்"*** என்று இந்திரன் கேட்டுக் கொண்டபடியே இரண்டு வரங்களைத் தந்தருளினாள்.

முன்பு ஸ்ரீ தேவி பிராட்டியார் பிருகு முனிவருக்கு க்யாதியினிடத்திலும், பின்னர் தேவர்கள் அமிர்தம் பெறுவதற்காக ஸமுத்ரமதனம் செய்த பொழுது திருப்பாற்கடலிலும் அவதரித்தாள். எப்பொழுதெல்லாம் ஜகத்பதியான ஜனார்த்தனன் இப்பூவுலகில் அவதாரம் செய்கின்றாறோ, அப்பொழுதெல்லாம் ஸ்ரீ தேவியும் எம்பெருமானுடன் கூட அவ்வோவதாரங்கள் பயன்பெற அவதரித்தருளுகிறாள்.

பகவான் கச்யப ப்ரஜாபதிக்கு அதிதி தேவியினிடத்தில் ***வாமனன்*** என்ற பெயரில் அவதரித்தபோது, பிராட்டி ***பதுமை*** என்ற பெயரில் அவதரித்தாள். அதே பகவான் ஸ்ரீவிஷ்ணு, ***பரசுராமன்*** என்ற பெயரில் அவதரித்தபோது பிராட்டியும் ***தரணி*** என்ற பெயரில் அவதரித்தாள். அந்த எம்பெருமான் சக்ரவர்த்தி திருமகனாக ***ஸ்ரீ ராமன்*** என்ற பெயரில் அவதாரம் செய்தபோது, பிராட்டி ***சீதையாக*** அவதரித்தாள். அந்த எம்பெருமானே ***கிருஷ்ணன்*** என்ற பெயரில் அவதரித்தபோது, பிராட்டி ***ருக்மிணி***யாக அவதரித்தாள்.

*(ஸமுத்ர மதனமும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் திருவவதாரமும் தொடரும்)*